கோமதி, வெங்கடேஷ், கூனியூர் கணேசன், எம்.எல்.ஏ. வேட்பாளராக இருந்த க.மு. சிவக்குமார், மூப்பனார் சங்கத்தைச் சார்ந்த அட்சாணி பாலமுருகன் என அதிகமானோர் ஒதுக்கப்பட்டனர்.

பொன். ராதாகிருஷ்ணனின் வளர்ச்சிக்குத் தடையாக இருப்பதாக நினைத்து, நாடார் சமூகத்திலேயே ஜாதீய சிந்தனை இல்லாத, தமிழக பா.ஜ.க.வின் அடித்தளமாக இருந்த எம்.ஆர். காந்தி, தீனதயாளன், டாக்டர் சந்திரபோஸ், தமிழ்ச்செல்வன் ஆகியோரையும் பலியாக்க இவர்கள் தவறியதில்லை. முக்கியமானவர்களை ஒதுக்கித் தள்ளிவிட்டு 'பாரதத்தை உலகின் குருவாக ஆக்க வேண்டும்' என இவர்களுக்கு யார் சொல்லிக் கொடுத்தார்கள் என்று தெரியவில்லை.

தென் தமிழ்நாட்டில் குறிப்பாக, திருநெல்வேலி மாவட்டத்தில் பலர் இயக்கத்திற்காக பலியாகி உள்ளனர். இவர்களில் நாடார் சமூகத்தைச் சார்ந்த சத்திய சீலனைத் தவிர வேறு எந்தக் குடும்பத்திற்கு (குமார் பாண்டியன் பலியான பின்பு ஆர்.எஸ்.எஸ்.ஸின் நேரடி தலையீட்டால் தற்போது அந்தக் குடும்பம் பராமரிக்கப்படுகிறது) இவர்கள் போராடி அரசின் நிதி உதவி பெற்றுத் தந்தனர்? குறிச்சி கண்ணன், டாக்டர் செல்வராஜ், மதுரை ராஜ கோபால், பேராசிரியர் பரமசிவன் இவர்களில் யாருக்கு அரசின் உதவித் தொகை பெற இவர்கள் போராடினார்கள்? பலி தானத்தில்கூட பாரபட்சம் காட்டியவர்கள் அல்லவா இவர்கள்?

இதில் ஆச்சர்யம் என்னவென்றால், இவ்வாறு ஒதுக்கப்பட்டஅனைவருமே வேறு எந்தக் கட்சியிலும் சென்று சேராமல் ஒதுங்கி தனது சொந்த வாழ்க்கையில் கவனம் செலுத்தி இந்து உணர்வோடு வாழ்ந்து வருகின்றனர். ஒரு சிலர் பரிவார் இயக்கங்களில் வேலை செய்து வருகின்றனர். ஆனால், அமைதியாக மெல்ல மெல்ல கட்சிபுதைகுழிக்குள்செல்கிறது என்பது தான் உண்மை.

மற்ற மாநிலங்களில் ஆர்.எஸ்.எஸ். கட்சியை நேரடியாகக் கட்டுப்படுத்துகிறது. இதனால், அங்கு ஜாதி ரீதியான ஆதிக்கம், ஏற்றத்தாழ்வு பிரச்சினை இல்லை. ஆனால், தமிழகத்தில் பி.ஜே.பி.யின் மீது ஆர்.எஸ்.எஸ்.ஸின் கட்டுப்பாடு இல்லை. அதனால்தான் இது போன்ற ஜாதீய வாதிகளின் செயல் அங்கீகரிக்கப்படுகிறது.

தமிழக ஆர்.எஸ்.எஸ்.ஸையே (ராஷ்ட்ரீய ஸ்வயம் சேவக் சங்கம்) இவர்கள் விரைவில் என்.எஸ்.எஸ்.ஸாக (நாடார் ஸ்வயம் சேவக் சங்கம்) என மாற்றிவிடுவார்கள். இனியாவது சங்கம் விழித்துக் கொண்டு செயல்படட்டும். இழந்தவர்களை மீண்டும் இணைத்து வலுப்படுத்தட்டும்.

இது பா.ஜ.க.வை அசிங்கப்படுத்தவோ, தனிப்பட்ட நபர்களை அசிங்கப்படுத்தவோ, அவர்களின் பணிகளைக் கொச்சைப்படுத்தவோ எழுதப்பட்ட கடிதம் அல்ல. ஜாதீய சிந்தனை எப்படி இயக்கத்தை அழித்துவருகிறதுஎன்பதை எடுத்துக்காட்ட வேண்டும் என்ற ஆதங்கத்தில் எழுதப்பட்ட கடிதமே இது!

**- உண்மைத் தொண்டன்**

## எனக்கு ஜாதி உண்டு!

**நமக்கு வந்த கடிதத்தின் தகவல்களைச் சொல்லிவிட்டு தமிழக பா.ஜ.க. தலைவர் பொன். ராதாகிருஷ்ணனிடம் அவரது கருத்தைக் கேட்டோம். சீரியஸாகப் பேசினார் அவர்.**



"பொன். ராதாகிருஷ்ணனுக்கு என்று ஒரு ஜாதி உண்டு என்பது உண்மைதான்! ஆனால், அந்த ஜாதி தேசபக்தியை அனைவருக்கும் சொன்ன பாரதி, வ.உ.சி., தெய்வத் திருமகனார், காமராஜர், கக்கன் போன்றோர் பின்பற்றிய ஜாதி மட்டும்தான். அப்படிப்பட்ட என் ஜாதியைப் பின்பற்றுகிறவர்கள்தான் கட்சியின் பொறுப்பாளர்களாக நியமிக்கப்பட்டிருக்கின்றனர். அடுத்ததாக, கட்சியில் ஆர்.எஸ்.எஸ். ஆதிக்கம் வந்தாலாவது நாடு உருப்படுமா என்று சிந்தித்து வருகிறோம். வருவது நாட்டுக்கு நல்லது செய்யும் என்பதே என் கருத்து" என்றார்.